**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 13–ஆம் நாள், திங்கட்கிழமை

**இ.ம.எண்.3/2026 இன் அ.வ.எண். 348/2013**

**CNR No. TNSA13-000255-2013**

பூவாயம்மாள் . . . மனுதாரர்/4 ம் பிரதிவாதி

/எதிராக/

1. நடேசன்
2. கஸ்தூரி
3. சதீஸ் . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 22.06.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்/4 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் திரு.N.ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/4 ம் பிரதிவாதி தனது மீது 22.10.2013 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் வழக்கில் 4ம் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கானது வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கானது நிலுவையில் உள்ளபோது மனுதாரருக்கு எதிராக 22.10.2013 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரருக்கு எதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், இவ்வழக்கில் தனக்கு நல்ல வழக்குமூலம் இருப்பதாகவும், இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு பெருத்த நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே மனுதாரர் மீது பிறப்பிக்கப்பட்ட exparte உத்திரவை ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். மனுதாரர் தாவா தாக்கலான ஆரம்ப நிலையிலேயே சம்மனை வாங்கியும், வேண்டுமென்றே வராமல் இருந்துவிட்டதால் அவருக்கு எதிராக சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேலும் மனுதாரர் தாவா சொத்தான ஒரு பகுதியை கடந்த 18.06.2016 ம் தேதியில் அவரது தம்பி மகளான 3ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.2800/2014ன் படி விற்றுவிட்டதாக மனுதாரரின் தம்பி 1ம் பிரதிவாதி மூலம் ஒப்புக்கொண்டு விளக்கவுரை தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் இனி அவருக்கும், தாவா சொத்தின் எந்த பகுதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், அவர் தாவா

சொத்தை பொறுத்து வெளி நபர் என்றும், அவருக்கு எதிராக கட்டளை 12 விதி 6 ன் படி ஏற்கனவே மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் அவர் இவ்வழக்கிற்கு அவசியமற்ற நபர் என்றும், எனவே சுமார் 13 ஆண்டுகள் கடந்த காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தனக்கு 22.10.2013 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் தாவா சொத்தின் ஒரு பகுதியை அவரது தம்பி மகளுக்கு விற்பனை செய்து விட்டதாகவும், எனவே தாவா சொத்திற்கு மனுதாரர் அவசியமற்ற நபர் என்றும், மேலும் அவருக்கு எதிராக 2013ம் ஆண்டு exparte உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் இம்மனுவை காலதாமதமாக தற்பொழுது தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என ஆட்சேபனை செய்துள்ளார்கள்.

வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் ஒரு பகுதியை மனுதாரர் விற்பனை செய்து விட்டதால் மட்டுமே அவர் இவ்வழக்கிற்கு அவசியமற்ற நபர் என கருத இயலாது. மேலும் விளம்புகை பரிகாரம் கோரிய இவ்வழக்கில், இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கை நடத்தி தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும் இம்மனுவை நீதியின் நலன் கருதி கீழ்க்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது.

6. **<u>தீர்வு :</u>**

இறுதியாக இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டு மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.3,000/—ஐ இம்மனுவின் செலவுத்தொகையாக 17.07.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 17.07.2026.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026—ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 13—ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2026.07.13 18:33:17 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

<u>1. மனுதாரர்/4 ம் பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2026.07.13 18:33:23 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

<u>**கூ.மா.உ.நீ.ஆத்தூர்**</u>
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 3/2026 இன்
அ.வ. எண்.348/2013
நாள் : 13.07.2026